மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) பிற மாநிலப் பரிசுச் சீட்டுகளின் போட்டியைத் தவிர்க்கவும் அப்பரிசுச் சீட்டுகள் நமது மாநிலத்தில் வந்து குவிவதைத் தடுக்கவும் இத்தடை விதிக்கப்பட்டுள்ளது. 23-12-71-ம் நாளிட்ட நிதித்துறையின் (பரிசுச் சீட்டுகள் பிரிவில்) வெளியான அரசு ஆணை 1800-ல் பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படுவதற்கு 1-1-72 முதற்கொண்டு தடை விதிக்கப்படுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையை எதிர்த்து, திரு. எச். கவுதம் சந்த் ஜெயின் என்பவரால் உயர்நீதி மன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. அதன் மூலம் 1-1-72 முதற்கொண்டு பிற மாநிலப் பரிசுச் சீட்டுகள் தமிழ் நாட்டிற்குள் விற்கப்படுவதைத் தடை செய்யும் அரசு ஆணை செயல்படுவது, உயர்நீதி மன்றத்தில் விசாரணையிலுள்ள ரிட் மனுவின் மீது முடிவெடுக்கப்படுகிற வரையில் நிறுத்தி வைக்கப் படவேண்டும் என்று உயர்நீதி மன்றம் ஆணையிட்டு உள்ளது.

THIRU A. R. DAMODARAN : Is there any proposal to create a separate fund for the raffle proceeds and to earmark it for medical relief or educational purposes, Sir?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போதே இந்தப் பரிசுச் சீட்டின்மீது கிடைக்கிற நிதித் தொகை, இது போன்ற பொதுநலக் காரியங்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டு மென்கிற அளவிலேதான் தீர்மானிக்கப்பட்டு, வரையறுக்கப் பட்டுள்ளது.

Zonal Conference of Education Ministers.

* 31 *Q.*—THIRU M. ARUMUGASWAMI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether any Zonal Conference of Education Ministers was held in Madras during September 1971;

(*b*) if so, the details of the subjects discussed; and

(*c*) the stand taken by the Tamil Nadu Government at this Conference?

கல்வி அமைச்சர்களின் மண்டல மாநாடு

திரு. எம். ஆறுமுகசாமி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் சென்னையில் கல்வி அமைச்சர்களின் மண்டல மாநாடு ஏதேனும் நடத்தப் பட்டதா?

(இ) ஆமெனில், அந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்ட பொருள்களின் விவரங்கள் யாவை?

(உ) இம்மாநாட்டில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நிலை யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பல்கலைக்கழகக் கல்விக்காக நூல்களை, பொதுவாக வட்டார மொழிகளிலும் குறிப்பாகத் தென் மாநில மொழிகளிலும் வெளியிடும் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டது. அடிப்படை நூல்கள் எழுதுவது பற்றிய அறிக்கையும், இந்திய நூலாசிரியர்கட்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் அடங்கிய ஆராய்ச்சித்துறையினர் திட்டமும், இந்திய மொழிகளின் மைய நிலையத்தின் முன்னேற்றமும், மைசூர், புபனேசுவர், பூனு, பாட்டியாலா, ஆகிய இடங்களிலுள்ள வட்டார மொழிப் பயிற்சி நிலையங்களில் பயிற்சி கொடுக்க ஆசிரியர்கட்கு அது வழங்கும் வசதிகளும் பற்றிய இன்னொரு அறிக்கையும் ஆராயப்பட்டது.

(உ) தமிழில் நூல்கள் வெளியிடும் திட்டத்தை நிறைவேற்று தலைக் குறித்து விளக்கம் செய்யப்பட்டது.

THIRU A. R. DAMODARAN: Sir, in this Zonal Conference of Education Ministers, did any discussion take place on a common pattern of High School education for all the High Schools in the four States in the Southern Zone?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இது பாடத் திட்டங்களைப் பற்றி, வேறு தன்மைகளைப் பற்றி ஆராய்வதற்காகக் கூட்டப்பட்டதல்ல. நூல்கள் வெளியிடு வதுபற்றி கருத்தறிவதற்காகக் கூட்டப்பட்ட ஒன்று. ஏனென்ருல்

4 மாநிலங்களுக்கும் சேர்த்து, பெங்களூரில் மொழிப் பயிற்சிக்கூடம் ஒன்று இருந்து வருகிறது. இந்திய அரசாங்கம் அதற்கு உதவித் தொகை அளிக்கிறது. எந்தெந்த நூல்கள் கொண்டுவரப்பட்டன, அந்த நூல்களின் ஆசிரியர்களுக்கு எவ்வளவு தரவேண்டும், இங்கே இருக்கிற ஆசிரியர்களைக் கொண்டு எந்தெந்த நூல்களை இயற்ற வேண்டும் அல்லது எந்தெந்த நூல்களை மொழி பெயர்க்க வேண்டும் என்பதைப்பற்றி ஆராய்வதற்காக அந்த மாநாடு கூட்டப்பட்டது.

THIRU G. VASANTHA PAI : Was the question of retention of English on Zonal basis taken into consideration in the Conference?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதுபற்றிய ஒரு முடிவுமில்லை. ஆகவே வட்டார மொழிகளிலே பாட நூல்களைக் கொண்டு வருவதுதான் இந்த மாநாட்டின் முக்கிய நோக்கம். எந்தெந்த மாநிலங்களில், எந்தெந்த மொழிகளிலே எந்த அளவுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன ; எந்த அளவுக்குக் கொண்டுவரப்படவேண்டும் என்பது ஆராயப்பட்டது. ஆங்கிலம் நீடித்து இருக்கவேண்டுமா, வேண்டாமா என்பது அந்தந்த மாநிலங்களின் தனிக்கொள்கையைப் பொறுத்தது.

Link Roads for Village Panchayats

* 32 Q.—THIRU V. THANGAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether there is any proposal with the Government to sanction special financial assistance to Village Panchayats for laying link roads?

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இணைப்புச் சாலைகள்.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துவதற்கு விசேஷ நிதி உதவி அளிக்க அரசாங்கத்திடம் செயற் குறிப்பு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.